**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

DEPOSITION OF WITNESS

**CC.No.47/2023**

PW-1

| | | | |
|---|---|---|---|
| Name | போத்திராஜா (PW1) | | |
| Father's Name | மணி | | |
| Village | கணக்கம்பாளைம் | | |
| Taluk | பெருமாநல்லூர் | | |
| District | திருப்பூர் மாவட்டம் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12**th day of February 2026** by M.Thangamani, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused present)*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):–**

1) நான் மேற்படி முகவரியில் குடியிருந்து கொண்டு பனியன் கம்பெனியில் பேக்கிங் காண்ட்ராக்டராக பணி செய்து வருகிறேன்.விபத்தில் இறந்து போன மணி என்பவர் என்னுடைய தகப்பனார். 11.09.2021 ம் தேதி அன்று டீ சாப்பிட்ட பின் கம்பெனிக்கு வருவதற்காக சுமார் பத்து முக்கால் மணி அளவில் காலையில் பெருமாநல்லூர் டு திருப்பூர் ரோட்டை கடக்கும்போது இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார்கள். என் தகப்பனாருக்கு தலையில் பின்புறம் அடிபட்டது. வாகனத்தில் பின் இருக்கையில் அமர்ந்து வந்த பெண்ணிற்கும் அடிபட்டதாக தகவல் சொன்னார்கள். எனக்கு கம்பெனி டிரைவர் தங்கராஜ் என்பவர் தகவல் சொன்னார். நான் சம்பவ இடம் வந்து என் தகப்பனாரை பார்த்துவிட்டு அவரை சரண் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்று சேர்த்தேன். என் தகப்பனார் தீவிர சிகிச்சை பிரிவு அனுமதிக்கப்பட்டதால் அவரால் பேச இயலவில்லை. பின்னிட்டு நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான் அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந் த புகார்

அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டது. என் தகப்பனார் அன்று மதியம் 3:30 மணி அளவில் காலமாகிவிட்டார். போலீசார் பிரேத விசாரணை செய்தபோது நான் உடன் இருந்தேன். வழக்கு சம்பந்தமாக என்னை போலீசார் விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை எதிரி தரப்பில் :**

சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. நான் வேலை செய்யும் கம்பெனிக்கும் சம்பவ இடத்திற்கும் சுமார் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 100 மீட்டர் இருக்கும். சம்பவ இடமான ரோட்டின் நடுவில் தடுப்பு சுவர் உள்ளது என்றால் சரிதான். சம்பவ டோட்டல் போவதற்கும் வருவதற்கும் தனித்தனியாக ரோடு உள்ளது என்றால் சரிதான். சம்பவ சம்பவ ரோட்டில் வேகத்தடை மற்றும் பாதசாரிகள் நடந்து செல்வதற்கான சீப்ரா லைன் உள்ளதா என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து 80 அடி வடக்கே சென்றாள் சாலையை கடப்பதற்காக ரோட்டின் நடுவே உள்ள சென்டர் மீடியன் அதிகமான இடைவெளியுடன் இருக்கும் என்றால் சரிதான். என் தகப்பனார் இறக்கும்போது அவருக்கு வயது 80 இருக்கும் என்றால் சரிதான். வயது முதிர்வுக்குண்டான உடல் உபாதைகள் என் தகப்பனாருக்கு இருந்தது என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சாலை நேர் சாலை என்றால் சரிதான். சம்பவ சாலை நேராக இருக்கும் சாலை என்பதாலும் என் தகப்பனார் ரோட்டில் வரும் வாகனத்தை கவனக்காமல் கடக்க முயன்றததால் தான் விபத்து நடந்ததது என்றால் இல்லை, வேகமாக வந்ததால்தான் விபத்து நடைபெற்றது. பாதசாரிகள் கடக்கும் இடத்திற்கு சென்று ரோட்டை கடந்திருந்தால் இந்த விபத்து நடந்திருக்காது என்றும், என் தகப்பானாரின் கவனக்குறைவால் தான் இந்த விபத்து நடந்தது என்றால் இல்லை. விபத்து நடந்த இடத்தில் இருந்து வலதுபுறமாக 200 மீட்டர் தள்ளி வரும் வாகனங்களை பார்க்க முடியும் என்றும் ஆனால் என் தகப்பனார் வாகனத்தை கவனிக்காமல் சாலையை கடந்த தால் தான் இந்த விபத்து நடந்துள்ளது என்றால் இல்லை. என் தகப்பனார் இறந்ததற்காக நாங்கள் தாக்கல் செய்த வாகன இழப்பீட்டு வழக்கில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் பணம் பெற்றுக்

கொண்டேன். பட்டியல் இட்ட சாட்சிகள் அனைவரும் என்னுடன் காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க வந்தார்களா என்றால் வந்தார்கள். அன்றைய தினமே காவல் நிலையத்தில் வைத்து என்னையும் மற்ற நபர்களான தங்கராஜ், தினேஷ்குமார், ஆறுமுகம், சரவணகுமார் ஆகியோரையும் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் நான் எழுதியது. மேற் சொன்ன நபர்கள் அனைவரும் விபத்து சமயத்தில் நான் பணிப்பறியும் கம்பெனியில் பணி புரிந்தவர்கள் என்றால் சரிதான்.இந்த விபத்து என் தகப்பனாரின் கவனக்குறைவால் தான் நடந்தது என்றும் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** : இல்லை

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>Sd–N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |